தமிழீழ பிரதேசத்தில் உள்ள சகல மோட்டார் ஊர்திகளையும் பதிவுக்குட்படுத்தவும், ஆண்டுவரி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குமான சட்டம்.

**இச்சட்டம் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதலின் அடிப்படையில் சட்டமாக்கப்படுகிறது.**

01. இச்சட்டம் தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச்சட்டம் என அழைக்கப்படும். இது 1993-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24-ந் திகதி முதல் நடைமுறைக்குவரும்.

02. போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரால் வகுக்கப்பட்ட நடைமுறைச் சட்டதிட்டங்களையும், காலத்திற்குக்காலம் போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவினரால் வெளியிடப் படும் சட்டதிட்டங்களையும் மீறுபவர்கள் மீது மோட்டார் ஊர்திப்பதிவாளரினால் வழங்கப்பட்ட நடைமுறைக்கு அமைய, நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் தமிழீழக் காவற்துறையினருக்கும் அல்லது ஊர்திப்பதிவாள ருக்கும் அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலருக்கும் உண்டு.

03. தமிழீழத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் அமைந்துள்ள பகுதியில் எவரேனும் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுச்செயலகத்தில் பதிவுசெய்யாமல் மோட்டார் ஊர்தி ஒன்றினை வைத்திருப்பது அல்லது பாவிப்பது அல்லது மோட்டார் ஊர்தி ஒன்றின் அடிச்சட்டம் அல்லது இயந்திரம் ஆகியவற்றை வைத்திருப்பது குற்ற மாகும்.

04. தமிழீழத்தில், பதிவுசெய்யப்படக்கூடிய மோட்டார் ஊர்தி வகைகளும், அவற்றுக்கான பதிவுக்கட்டணமும்-

1. மோட்டார் கார்

| | |
|---|---|
| 1. நோயாளர் ஊர்தி | ரூபா 1000/- |
| 2. பிரேத ஊர்தி | ரூபா 1000/- |

3. ஜீப் வண்டி — ரூபா 1000/-
4. ஏனைய பிரத்தியேக பிரயாண ஊர்திகள் (சாரதி உட்பட 9 ஆசனங்களுக்கு உட்பட்டது) — ரூபா 1000/-

2. மோட்டார் லொறி

1. சிறிய லொறி (எல்வ். ஆயின் ஆறு சில்லுகளுக்குட்பட்டது) — ரூபா 1000/-
2. நடுத்தர லொறி (நான்கு சில்லுகளுக்குட்பட்டது) — ரூபா 1000/-
3. பெரிய லொறி (நான்கு சில்லுகளுக்கு மேற்பட்டது) — ரூபா 1000/-

3. விவசாய உபயோக ஊர்திகள்

1. உழவு இயந்திரம் — ரூபா 500/-
2. உழவு இயந்திர இழுவைவண்டி (ரெயிலர்) — ரூபா 350/-
3. இரு சக்கர இழுபொறி ஊர்தி (கை உளவு இயந்திரம்) — ரூபா 500/-
4. இருசக்கர இழுவை வண்டி (சிறியது) — ரூபா 200/-

4. பொதுமக்களின் பிரயாண ஊர்திகள்

1. வான் (சாரதி உட்பட 14 ஆசனங்களுக்குட்பட்டது) — ரூபா 1000/-
2. மினி பஸ் (சாரதி உட்பட 14 ஆசனங்களுக்குட்பட்டது) — ரூபா 1000/-
3. பேருந்து (சாரதி உட்பட 29 ஆசனங்களுக்கு மேற்பட்டது) — ரூபா 1000/-

5. மோட்டார் சைக்கிள், முச்சக்கர ஊர்தி

1. மோட்டார் சைக்கிள் — ரூபா 200/-
2. முச்சக்கர ஊர்தி — ரூபா 500/-

6. அடிச்சட்டம் அல்லது இயந்திரம் — ரூபா 25/-

7. இச்சட்டத்தின் பிரிவு 4 (1) தொடக்கம் 4 (5) வரையிலான பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பகுதிகளில் அடங்காததும் அல்லது மோட்டார் ஊர்தி என அடையாளம் காணக்கூடியதுமான அத்தகைய விவரணத்தையுடைய மோட்டார் ஊர்தி ஒன்றினை, மோட்டார் ஊர்தி ஒன்றாக மோட்டார் ஊர்திப்பதிவாளரினால் பதிவுசெய்துகொள்ளப்படலாம்.

விளக்கம்

1. இந்த நடைமுறையில் விதந்துரைக்கப்பட்டவாறு மோட்டார் ஊர்தி ஒன்று என அடையாளம் காணக்கூடியமுறையில், அமைப்பு, நிறை, அளவு தேவையான உபசரணங்களைக்கொண்டு இராத ஊர்திகள் எதையும் மோட்டார் ஊர்தி என்று பதிவுக்குட்படுத்தமுடியாது.

உதாரணம்

ஒரு மோட்டார் ஊர்தியின் வெறும்பாரம் 2½ மெற்றிக்தொன் நிறையை விஞ்சுவதாயின், அந்த மோட்டார் ஊர்தியை மோட்டார் கார் என்ற வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்ட ஊர்தி ஒன்றாகப் பதிவுக்குட்படுத்தமுடியாது.

விளக்கம்

2. குறித்துரைக்கப்பட்ட பதிவுக்கட்டணத்தைச் செலுத்தாத எந்தவொரு ஊர்தியையும் பதிவுக்குட்படுத்தலாகாது.

05. பின்வரும் ஊர்திகள் தொடர்பாகக் கட்டணங்கள் எதுவும் செலுத்தவேண்டியதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குச் சொந்தமான அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சேவைக்கெனத் தனித்துவமாகப்பயன்படுத்தப்படும் ஊர்திகள் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் காலத்திற்குக்காலம் குறித்துரைக்கும் வேறு நாட்டு அரசிற்குச் சொந்தமான மோட்டார் ஊர்திகளின் பதிவிற்கு அல்லது தமிழீழத்தில் உள்ள எவரேனும் வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு (அவர் எவ்வகையான

